**செய்தி வெளியீடு எண்: 075** **நாள்: 30.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (30.1.2018) தலைமைச் செயலகத்தில், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75 கடைகளுடன் கட்டப்பட்டுள்ள மலர் வணிக வளாகத்திற்கு, ‘‘பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மலர் வணிக வளாகம்’’ எனப் பெயர் சூட்டியும், தோவாளை வட்டம், பூதப்பாண்டியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால், 2015–16ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் மல்லி, ரோஜா, பிச்சி, கோழிக்கொண்டை, சம்பங்கி போன்ற மலர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி, நியாய விலை பெறுவதை உறுதி செய்யவும், வணிகர்கள் மற்றும் நுகர்வோர்களின் வசதிக்காகவும், தோவாளையில் மலர் வணிக வளாகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75 கடைகளுடன் கட்டப்பட்டுள்ள மலர் வணிக வளாகத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று ‘‘பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மலர் வணிக வளாகம்’’ எனப் பெயர் சூட்டி காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்த மலர் வணிக வளாகம் மூலம், கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் மலர் பயிரிடும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயன்பெறுவர்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நவீனத் தொழில்நுட்பங்களை வழங்கவும், முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகளை இருப்பு வைத்து வழங்கவும், செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கவும், அனைத்து பயனாளிகளையும் ஒருங்கிணைத்து பன்முக செயல்பாட்டு முனையமாக திகழவும், கருத்துக் காட்சி,

விவசாயிகள் பயிற்சி அறை, இடுபொருள் இருப்பு வைத்து விநியோகிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் 50 வட்டாரங்களில் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், பூதப்பாண்டியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.சு.ஜ.சிரு, இ.ஆ.ப, வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.வி. சந்திரசேகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**